ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2092/13 - 2018 ඔක්තෝබර් මස 08 වැනි සඳුදා - 2018.10.08
*2092/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: HAK/LAN/1/14.
காணி அமைச்சின் குறிப்பு இல.:4-3/9/2014/WS/232.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவின் கந்தபட பத்துவ கிழக்கு சிறு பிரிவின் இலக்கம் 294 உடுபீல்லகொட கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் மாத்தறை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அதிபரவர்களால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராமப்பட இலக்கம் 497 இல் தாள் இலக்கம் 08 இல் குறித்த கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள்.

01. **துண்டு இல. 137**
**காணியின் பெயர்: திவெலகனே வத்த, அல்லலயகும்புவ; காணியின் உரிமையாளர் பெயர்: விகாரை அதிபர் ஸ்ரீ சுதர்மாராம புராண விகாரை உடபீல்லகொட; விஸ்தீரணம்: 0.0044 ஹெக்டயார்.**

வடக்கு : எல மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு : துண்டு இலக்கம் 14, 4, 13A; தெற்கு : துண்டு இலக்கம் 13A, 4; மேற்கு: துண்டு இலக்கம் 4.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு ஹக்மன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குஸலக்க நாணாயக்கார,
பிரதேச செயலகம்,
ஹக்மன.

2018 ஒற்றோபர் 03,
ஹக்மன பிரதேச செயலகத்தில்.

10 - 1253